# T20 Current Affairs

## for

# TNPSC

## May - 2022

Towards Your Success


**THULIRR IAS ACADEMY**

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

**http://thulirracademy.in/ | Mobile # +91 9445065552 | Telegram: Thulirr Current Affairs**

## Table of Contents

தமிழக நிகழ்வுகள் ......3
இந்திய நிகழ்வுகள் ......6
திருவிழா ......10
பொருளாதாரம் ......10
உலக நிகழ்வுகள் ......12
சுற்றுச்சூழல் ......12
அறிவியல் & தொழில்நுட்பம் ......12
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ......13
திட்டம் ......15
மாநாடுகள் ......15
பாதுகாப்பு ......16
விருதுகள் ......17
விளையாட்டு நிகழ்வுகள் ......18
புள்ளிவிவரம் ......19
புத்தகம் ......19
முக்கிய தினம் ......20

**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirraacademy.in/currentaffairs.php?ca_category=T20-T



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## தமிழக நிகழ்வுகள்

- **10-ஆம் நூற்றாண்டு முற்கால பாண்டியர் நடுகல்:**
  - இலுப்பையூரணி (விருதுநகர் மாவட்டம்) கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு முதற்கால பாண்டியர் நடுகல் முதல்முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - புல்லன் சாத்தான் என்ற வீரர் ஒரு ஊரை வென்று போரில் உயிர் நீத்தார் என கல்வெட்டு (வட்டெழுத்து) கூறுகிறது.
- **கீழடி அகழாய்வில் மனித முகம் போன்ற அமைப்புடைய சுடுமண் சிற்பம் கண்டெடுப்பு**
  - சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் 8-ஆம் கட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட மனித முகம் போன்ற அமைப்பு கொண்ட சுடுமண் சிற்பம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
  - கீழடியில் எட்டாம் கட்ட அகழாய்வுக்காக தோண்டப்பட்ட குழியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பண்டைய ஊழி தமிழர்கள் பயன்படுத்திய மனித முகம் போன்ற உருவம் கொண்ட சுடுமண் சிற்பம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- **வெம்பக்கோட்டை அகழாய்வில் யானை தந்தத்தில் செய்த தொங்கட்டான் (காதணி) கண்டெடுப்பு**
  - ''வெம்பக்கோட்டை விஜயகரிசல்குளம் அகழாய்வின்போது அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய யானை தந்தால் செய்யப்பட்ட அணிகலன் மற்றும் சுடுமண்ணால் ஆன தொங்கட்டான் ஆகிய அணிகலன்கள் கண்டறியப்பட்டுள்ளது.'
  - யானை தந்ததால் செய்யப்பட்ட அணிகலன் 5 செ.மீ. நீளமும், 0.8 செ.மீ. விட்டமும், 61 கிராம் எடையும் கொண்டதாக உள்ளது.
  - அதேபோல், சுடுமண் காதணி 2.2 செ.மீ. நீளமும், 1.01 செ.மீ. சுற்றளவும் 65 கிராம் எடையும் கொண்டதாக உள்ளது.
- **தமிழகத்தில் 4,200 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு பயன்பாடு**
  - தமிழ்நாடு தொல்லியல் துறையால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மயிலாடும்பாறை என்ற இடத்தில் ஈமச்சின்னங்கள் மற்றும் வாழ்விட பகுதியில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
  - இதன்மூலம், தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முன்னரே நிலவி வந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- **தேசிய அளவில் சிறப்பாக செயல்புரிந்த 12 ஊராட்சிகளுக்கு விருது**
  - மூன்றடுக்கு ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருதுகளை திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சிக்கும்; ஊராட்சி ஒன்றியங்களான விருதுகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த மண்டபம் ஊராட்சி ஒன்றியம்; கிராம ஊராட்சிகளான விருதுகள் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அக்கரைப்பட்டி கிராம ஊராட்சி, கரூர் மாவட்டம்,



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

கரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மண்மங்கலம் கிராம ஊராட்சி, மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சின்னப்பட்டி கிராம ஊராட்சி, கன்னியாகுமரி மாவட்டம், ராஜக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அத்திக்காட்டுவிளை கிராம ஊராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கங்கலேரி கிராம ஊராட்சி, புதுக்கோட்டை மாவட்டம், கரம்பகுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கட்டாத்தி கிராம ஊராட்சி ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது.

- சிறந்த கிராம சபைக்கான தேசிய விருது ராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் சாத்தனூர் கிராம ஊராட்சிக்கும்; கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்திற்கான (வி.பி.டி.பி.) தேசிய விருது சிவகங்கை மாவட்டத்தை சார்ந்த துவார் கிராம ஊராட்சிக்கும்; குழந்தைகள் நேய கிராம ஊராட்சிகான விருது நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குஞ்சப்பனை கிராம ஊராட்சிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**இயல் விருது**

- எழுத்தாளர் ஆ.இரா. வேங்கடாசலபதிக்கு கனடா இலக்கியத் தோட்டத்தின் ‘இயல்’ வாழ்நாள் சாதனையாளர் விருதும் நீதிபதி சந்துருவுக்கு நானும் நீதிபதியானேன் நூலுக்கு கட்டுரைக்கான இயல் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

**“சின்னக் கலைவாணர் விவேக்” சாலை**

- சென்னையில் நடிகர் விவேக் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள பத்மாவதி நகர் பிரதான சாலைக்கு ”சின்னக் கலைவாணர் விவேக் சாலை” என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**கிழக்கு கடற்கரை சாலை (ECR)**

- முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**செவிலியர்களுக்கு அரசு சார்பில் 'நைட்டிங்கேல்' விருது**

- சிறப்பான சேவையாற்றும் செவிலியர்களுக்கு தமிழக அரசு சார்பில் ஆண்டுதோறும் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருது வழங்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**பேரறிவாளன் விடுதலை**

- அரசமைப்புச் சட்டத்தின் 142-ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவரது மேல்முறையீட்டு மனு மீது உச்சநீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.
- ஷரத்து - 161-இன் கீழ் தண்டனைகளைக் குறைப்பது, மன்னிப்பு வழங்குவது தொடர்புடைய விவகாரங்களில் மாநில அமைச்சரவையின் ஆலோசனை ஆளுநரைக் கட்டுப்படுத்தும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **2020ஆம் ஆண்டு சாலை விபத்துகளில் தமிழகம் முதலிடம்**
  - 'இந்தியாவில் 2020-இல் பதிவான சாலை விபத்துகள்' என்ற தலைப்பில் மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில், நாட்டில அதிகப்படியாக சாலை விபத்துகளில் (45,484) தமிழகமும், அதிகப்படியான உயிரிழப்பில் (19,149) உத்தர பிரதேசமும் முதலிடத்தில் வகிக்கின்றன என்று மத்திய நெடுஞ்சாலை போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- **ஆண்டுக்கு ஆறு கிராம சபைக் கூட்டங்கள் அரசாணை வெளியீடு**
  - அனைத்து ஊராட்சிகளிலும் ஆண்டுதோறும் குடியரசு தினம், உழைப்பாளர் தினம், சுதந்திர தினம், காந்தி ஜெயந்தி ஆகிய நான்கு நாட்களில் மட்டும், கிராம சபைக் கூட்டம் நடந்து வந்தது. இக்கூட்டங்களில் மக்கள் பங்கேற்பதையும், முடிவெடுப்பதையும் அதிகப்படுத்த, இனி ஒவ்வொரு ஆண்டும் ஆறு முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும்.
  - கூடுதலாக, மார்ச் 22 (உலக தண்ணீர் தினம்), நவம்பர் 1 (உள்ளாட்சி தினம்) ஆகிய நாட்களிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடக்கும் என, முதல்வர் அறிவித்தார்.அதன்படி நடப்பாண்டு முதல், ஆறு நாட்கள் கிராம சபைக் கூட்டம் நடத்த, அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.
- **திரைத் துறை வாழ்நாள் சாதனையாளர் விருது: தேர்வுக் குழுத் தலைவராக எஸ்.பி.முத்துராமன்**
  - திரைத்துறை வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு தகுதியான கலைஞர்களைத் தேர்வு செய்யும் குழுவின் தலைவராக இயக்குநர் எஸ். பி.முத்துராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **இந்திய ஹாக்கி அணியில் தமிழக வீரர்கள்**
  - 13 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ஹாக்கி அணியில் தமிழக வீரர்கள் (மாரீஸ்வரன் சக்திவேல், கார்த்திக்)இடம் பெற்றுள்ளனர்.
  - 12-வது தேசிய ஜுனியர் ஹாக்கி போட்டி கோவில்பட்டியில் நடைபெற்றது.
- **உயர்கல்வி அகில இந்திய கணக்கெடுப்பு (2019 - 2020)**
  - 2019 - 2020 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வியின் அகில இந்திய கணக்கெடுப்பில் 18 முதல் 23 வயதுக்குட்பட்டவர்களுக்கான மூன்றாம் நிலைக் கல்வியில் மொத்த சேர்க்கையில் இந்தியாவிலேயே அதிகபட்சமாக 51.4 சதவிகிதம் பெற்று தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- **தமிழகத்தில் 10% பேருக்கு நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு**
  - தமிழகத்தில் நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு குறித்தான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ள நிலையில் 10% பேருக்கு (ஐந்தில் ஒருவருக்கு) நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளது.
  - பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குனரகம் சார்பில் நாள்பட்ட சிறுநீரக நோய் பரவல் குறித்து கணக்கெடுப்பு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **"Umagine": தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு உச்சிமாநாடு**
  - "Umagine": தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு உச்சிமாநாடு செப்டம்பர் 21 முதல் 23 வரை தமிழ்நாடு நடத்த உள்ளது.
- **மாநில அளவிலான முதல் இளைஞர் திறன் திருவிழா**
  - சென்னை ராணி மேரி கல்லூரியில் மாநில அளவிலான முதல் இளைஞர் திறன் திருவிழா நடைபெற்றது.
  - 18 முதல் 35 வரை அதிக இளைஞர்கள் உள்ள நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.
  - திறன் மேம்பாட்டு இயக்கத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிதான் – நான் முதல்வன் திட்டம்.
- **பிரதமர் மோடிக்கு – சிலப்பதிகார நூல்**
  - பல்வேறு திட்டங்கள் தொடக்கவிழா நிகழ்ச்சிக்கு சென்னை வந்த பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் சிலப்பதிகாரம் (ஆங்கில) நூலை வழங்கினார். ஆர்.பார்த்தசாரதி, ஆர்.எஸ்.பிள்ளை, அலைன் டேனியல் ஆகியோர் மொழி பெயர்த்துள்ளனர். கே. செல்லப்பன் இந்த நூலை தொகுத்தார்.
- **TRAI – தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் வெள்ளி விழா**.
  - சென்னை – IIT-யில் ரூ.220 கோடி செலவில் 8 நிறுவனங்கள் உருவாக்கியுள்ள 5ஜி (தொலைதொடர்புச் சேவை) சோதனை அமைப்பை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.
  - பிப்ரவரி 20, 1997 – துவக்கம்.

# இந்திய நிகழ்வுகள்

- **நீதிமன்றங்களில் உள்ளூர் மொழி**
  - புதுதில்லியில் முதலமைச்சர்கள் மற்றும் 25 உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமர் மோடி உரையாற்றினார்.
  - உள்ளூர் மொழிகள் வழக்காடு மொழியாக இருக்கும் பட்சத்தில் மக்களின் நம்பிக்கை அதிகரிக்கும் என்றும் நீதித்துறையின் சேவைகளை மக்கள் எளிதாக புரிந்து கொள்வதற்கு இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார். அரசியல் அமைப்பு சட்டத்தின் பாதுகாவலராக நீதித்துறையும், மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் இடமாக நிர்வாகத் துறையும் இருப்பதாக அவர் கூறினார்.
- **"தக்காளி" காய்ச்சல்**
  - கேரளாவில் பரவும் தக்காளி காய்ச்சல் நோயானது, கை, பாதம், வாய் நோய் குறிப்பாக காக்ஸ்சாக்கி வைரஸ் A 16 என்ற வைரஸால் ஏற்படுகிறது. இது மிதமான பாதிப்பையே ஏற்படுத்தும்.
  - தக்காளி காய்ச்சலின் அறிகுறிகள்:
    1. காய்ச்சல், தொண்டை எரிச்சல், தொண்டை, வாய் மற்றும் நாக்கில் புண்,
    2. தலைவலி, பசியின்மை
    3. கை, கால், முதுகுக்கு கீழ் மற்றும் பாதங்களில் கொப்பளங்கள் தோன்றுதல்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

4. ஓரிரண்டு நாட்களில் தோலில் அரிப்பு. பின்னர் அங்கு சிவப்பு நிறத்தில் தட்டையாக மாறும். சில நேரங்களில் அவை கொப்புளங்களாகவும் மாறும்

❖ **ஆசிய தேர்தல் ஆணையங்கள் சங்கம்: தலைமையாக இந்தியா தேர்வு**

➢ 2022-24-ஆம் ஆண்டுகளுக்கான ஆசிய தேர்தல் ஆணையங்கள் சங்கத்தின் தலைமையாக இந்திய தேர்தல் ஆணையம் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

➢ 20 ஆசிய நாடுகளின் தேர்தல் நிர்வாக அமைப்புகள் உறுப்பினர்களாகக் கொண்ட இந்த சங்கத்தின் நிர்வாகக் குழு, பொதுக்குழுக்கூட்டம் கடந்த மே 7-ஆம் தேதி பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்தியா தேர்வு செய்யப்பட்டது.

❖ **லோக்பால் புதிய தலைவர் நியமன நடைமுறை தொடக்கம்**

➢ தற்போதைய லோக்பால் அமைப்பின் தலைவர் நீதிபதி பினாகிசந்திர கோஷின் பதவிக்காலம் வரும் மே 27-இல் நிறைவடைவதால், அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறையை மத்திய அரசு தொடங்கிவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

➢ அரசியல்வாதிகள், அரசு ஊழியர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் லோக்பால் அமைப்பானது, தலைவர், நீதித்துறையை சேர்ந்த 4 உறுப்பினர்கள், நீதித்துறை அல்லாத பிற துறைகளைச் சேர்ந்த 4 உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படுகிறது. தற்போது லோக்பாலில் 6 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். நீதித்துறை சார்பில் நியமிக்கப்படும் உறுப்பினர் நியமனங்கள் கடந்த 2 ஆண்டுகளாக காலியாக உள்ளன.

➢ லோக்பால் அமைப்பு ஏற்பட காரணமாக இருந்த லோக்பால் சட்டம் கடந்த 2013- இல் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. இதையடுத்து, லோக்பால் தலைவராக நீதிபதி பினாகி சந்திர கோஷுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கடந்த 2019 மே 23-இல் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

➢ அவரது பதவிக்காலம் வரும் மே 27-ஆம் தேதியுடன் நிறைவடைவதால், அடுத்த லோக்பால் தலைவரை நியமிப்பதற்கான நடைமுறையை மத்திய அரசு தொடங்கி விட்டடதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். லோக்பால் தலைவரும், அதன் உறுப்பினர்களும் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் அல்லது 70 வயதை எட்டும் வரை அந்தப் பொறுப்பில் நீடிக்கலாம்.

➢ அந்த வகையில் கடந்த 1952 மே 28-இல் பிறந்த நீதிபதி பினாகி சந்திர கோஷ்70 வயதை எட்டுவதால், வரும் 27-ஆம் தேதி அவரது பதவிக்காலம் நிறைவுக்கு வருகிறது. லோக்பால் அமைப்பிடம் கடந்த 2020-21-ஐ காட்டிலும், 2021 ஏப்ரல் முதல் 2022 ஜனவரி 31 வரையிலான காலகட்டத்தில், 80 சதவீதம் அதிகமாக 4244 ஊழல் புகார்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2019-20-இல் லோக்பாலிடம் 1,427 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது தகவலறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தெரியவந்துள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **பருத்தி விலையை முறைப்படுத்த இந்திய பருத்தி கவுன்சில்**
  - பருத்தி கழகம் மற்றும் பருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதிநிதியான பருத்தி நிபுணர் சுரேஷ் அமிர்தலால் கோடக் தலைமையில் இந்திய பருத்தி கவுன்சில் அமைக்கப்படும் என்று மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்துள்ளார்.
  - பருத்தி விலையை முறைப்படுத்த இந்திய பருத்தி கவுன்சில் அமைக்கப்படும்: அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்துள்ளார். ஜவுளி, வேளாண்மை, வர்த்தகம், நிதி, தொழில்துறை அமைச்சகங்களின் பிரதிநிதிகள் பருத்தி கவுன்சில் இடம் பெறுவர். இந்திய பருத்திக்கழகம், பருத்தி ஆராய்ச்சி நிலைய பிரதிநிதிகளும் பருத்தி கவுன்சிலில் இடமளிக்கப்படும் எனவும் கூறினார்.
- **கேரளாவில் இந்தியாவின் முதல் அரசு ஓடிடி தளம்**
  - இந்தியாவிலேயே முதல் முதலாக அரசு சார்பில் ஓடிடி தளம் உருவாக்கப்பட உள்ள முயற்சியை கேரள அரசு எடுத்துள்ளது
  - 'சிஸ்பேஸ்' (cspace) என பெயரிடப்பட்டுள்ள இந்த ஓடிடி அமேசான் போன்று செயல்பட உள்ளது நவம்பர் 1ஆம் தேதி இந்த ஓடிடி செயல்பாட்டுக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது
- **மாநிலங்களுக்கு இடையிலான சபை மறுசீரமைப்பு**
  - நாட்டில் கூட்டுறவு கூட்டாட்சியை ஊக்குவிக்கவும் ஆதரவளிக்கவும் செயல்படும் மாநிலங்களுக்கு இடையேயான சபை, பிரதமர் நரேந்திர மோடியின் தலைவராகவும், அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் ஆறு மத்திய அமைச்சர்கள் உறுப்பினர்களாகவும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.
  - 10 மத்திய அமைச்சர்கள் மாநிலங்களுக்கு இடையேயான சபைக்கு நிரந்தர அழைப்பாளர்களாக இருப்பார்கள்.
  - மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை தலைவராகக் கொண்ட மாநிலங்களுக்கு இடையேயான சபையின் நிலைக்குழுவையும் அரசாங்கம் மறுசீரமைத்துள்ளது.
  - ஆந்திரப் பிரதேசம், அசாம், பீகார், குஜராத், மகாராஷ்டிரா, ஒடிசா, பஞ்சாப் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் முதல்வர்களும் மாநிலங்களுக்கு இடையேயான குழுவின் நிலைக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.
- **பாரத் குழாய் திட்டம்**
  - பிளம்பெக்ஸ் இந்தியக் கண்காட்சி விழாவினை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் S.ஹர்தீப் சிங் பூரி அவர்கள் தொடங்கி வைத்தார்.
  - இவர் நீர்ப் பாதுகாப்பு மற்றும் நிலையான மேம்பாட்டின் புதிய சகாப்தத்தில் இந்தியா நுழைவதற்கு உதவும் குறைநீர் ஓட்டத்திற்கானச் சாதனங்கள் மற்றும் கழிவறை நீர் குழாய்கள் தயாரிப்பதற்கான பிரச்சாரமான பாரத் குழாய் என்ற ஒரு திட்டத்தையும் அறிவித்தார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **நாட்டின் மிகப்பெரிய ட்ரோன் திருவிழா**

- மே 27, 2022 அன்று நாட்டின் "மிகப்பெரிய ட்ரோன் திருவிழா" என்று அழைக்கப்படும் இந்த நிகழ்வானது டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நடைபெற்றது.

❖ **ABHA மொபைல் செயலி**

- ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின் முதன்மைத் திட்டத்தின் கீழ் ஆயுஷ்மான் பாரத் ஹெல்த் அக்கவுண்ட் (ABHA) என்ற மொபைல் செயலியை தேசிய சுகாதார ஆணையம் தற்போது புதுப்பித்து மேம்படுத்தப்படுத்தியுள்ளது.
- முன்பு இச்செயலி NDHM ஹெல்த் ரெக்கார்ட்ஸ் ஆப் (APP) என அழைக்கப்பட்டது.

❖ **இ-ஷிரம்**

- பட்ஜெட் உரையின் போது, கடன் வசதி, திறன் மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான சேவைகளை செயல்படுத்த, தேசிய தொழில் சேவை (NCS), இ-ஷிரம், உத்யம் மற்றும் அசீம் ஆகிய நான்கு இணையதளங்களை இணைக்கும் அறிவிப்பை நிதியமைச்சர் செய்தார்.
- இ-ஷிரம் தளத்தை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு 12 இலக்க தனித்துவ எண்ணுடன் கூடிய இ-ஷ்ராம் அட்டையானது வழங்கப்படும்.
- இ-ஷிராம் தளத்தில் பதிவு செய்து கொண்ட பணியாளர் விபத்து மூலம் உயிரிழந்தாலோ அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டாலோ ரூ 2 லட்சம் வழங்கப்படும் என்றும், ஓரளவு ஊனத்திற்கு ரூ 1 லட்சம் வழங்கப்படும்.

❖ **முதன்முறையாக ட்ரோன் மூலம் பார்சல் விநியோகம்**

- நாட்டிலேயே முதல் முறையாக ஆளில்லா விமானம் (ட்ரோன்) மூலம் இந்திய அஞ்சல் துறை, மருந்து பார்சலை விநியோகம் செய்துள்ளது. குஜராத் மாநிலம், கட்ச் மாவட்டத்தில் இந்தச் சோதனை முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

❖ **கரோனாவால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு மாதம் ரூ.4,000 பிரதமர் அறிவிப்பு**

- கரோனா நோய்த் தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் மாதந்தோறும் ரூ.4,000 கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- புத்தகங்கள் சீருடைகளுக்கான செலவு மட்டுமின்றி, எதிர்காலத்தில் உயர்கல்வி அல்லது தொழில் சார்ந்த படிப்புகளைப் படிக்க விரும்பும் குழந்தைகளுக்கு கல்விக்கடன் தேவைப்பட்டால் அதற்கும் பிஎம் கேர்ஸ் திட்டம் உதவி செய்யும். இந்தத் திட்டங்கள் மூலம் மாதந்தோறும் ரூ.4 ஆயிரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- அதுமட்டுமின்றி, 18 வயது முதல் 23 வயது வரையில் மாதந்தோறும் உதவித்தொகை வழங்கப்படும். மேலும், 23 வயதாகும்போது ரூ.10 லட்சம் கிடைக்கும். இதுதவிர, மருத்துவ சிகிச்சைக்கு ஆயுஷ்மான் சுகாதார அட்டையும் வழங்கப்பட்டு வருகிறது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **ராம்நாத் கோவிந்த் முதல் முறையாக ஜமைக்கா பயணம்**
  - இந்தியா-ஜமைக்கா இடையே தூதரக உறவு தொடங்கி 60 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், கரீபியன் நாடான ஜமைக்காவுக்கு 4 நாள் பயணமாக சென்றார். ஜமைக்காவுக்கு இந்திய ஜனாதிபதி ஒருவர் செல்வது இதுவே முதல் முறை ஆகும்.
  - ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், கிங்ஸ்டனில் அம்பேத்கர் பெயர் சூட்டப்பட்ட R.N.K. Dr. அம்பேத்கர் அவென்யூ எனும் சாலையைத் திறந்து வைத்தார். (ஜமைக்கா : பிரதமர் ஆன்ட்ரூ ஹோல்னஸ்).
- **பெகாஸஸ் (Pegasus) உளவு மென்பொருள்**
  - இஸ்ரேலைச் சேர்ந்த (Israel Spyware - NSO) நிறுவனம் மூலம் இந்தியாவில் எதிர்கட்சியினர், சமூக ஆர்வலர்கள், பத்திரிக்கையாளர்கள் உள்பட சுமார் 300 பேரின் கைப்பேசிகள் உளவு பார்க்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
- **இந்தியாவில் 19% பேருக்கு கழிவறை வசதி இல்லை**
  - இந்தியாவில் 19% பேருக்கு கழிவறை வசதி இல்லை தேசிய குடும்ப நலத்துறை (NFHS) 2019 – 2021 ஆய்வில் வெளியாகியுள்ளது.

## திருவிழா

- **ஷிருய் லில்லி (Shirui Lily Festival) திருவிழா**
  - மணிப்பூரின் உக்ருல் மாவட்டத்தில் உள்ள ஷிருய் கிராமத்தில் மாநில அளவிலான ஷிருய் லில்லி திருவிழாவின் 4-வது பதிப்பு தொடங்கியது. இந்த விழாவை மணிப்பூர் மாநில கவர்னர் இல.கணேசன் தொடங்கி வைத்தார். அதில் மணிப்பூர் முதல்-அமைச்சர் என்.பிரேன் சிங் கலந்து கொண்டார்.
  - ஷிருய் லில்லி மணிப்பூரின் மாநில மலர் ஆகும்.

## பொருளாதாரம்

- **வங்கிகளுக்கான வட்டி விகிதம் உயர்வு**
  - வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதத்தை (ரெப்போ) 4.40 சதவீதமாக ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது. இதனால், தனிநபர் கடன், வீடு, வாகனக் கடன் ஆகியவற்றுக்கான வட்டி அதிகரிக்கவுள்ளது.
  - 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்குப் பிறகு முதல் முறையாக ரெப்போ விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது.
- **ஆண்டு வருவாய் 10,000 கோடி டாலரை தாண்டியது ரிலையன்ஸ்**
  - முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், ஆண்டு வருவாய் 10,000 கோடி டாலரை தாண்டிய முதல் இந்திய நிறுவனம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியானது அமெரிக்கா**
  - கடந்த நிதியாண்டில் இந்தியா-அமெரிக்கா இடையிலான வர்த்தக மதிப்பு 119.42 பில்லியன் டாலர்களை (சுமார் ரூ.9.27 லட்சம் கோடி) எட்டியது. இதன் மூலம் சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியாவின் மிகப்பெரிய கூட்டாளியாகியுள்ளது அமெரிக்கா.
  - இந்த புள்ளிவிவரத்தை மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ளது. அந்த புள்ளிவிவரத்தின்படி, கடந்த 2013-14 முதல் 2017-18-ஆம் நிதியாண்டு வரையும், 2020-21-ஆம் நிதியாண்டிலும் இந்தியாவின் முதன்மை வர்த்தகக் கூட்டாளியாக சீனா திகழ்ந்துள்ளது. இந்நிலையில், கடந்த நிதியாண்டில் சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாகியுள்ளது அமெரிக்கா.
- **5 ஜி மூலம் பொருளாதாரம் ரூ.35 லட்சம் கோடி உயரும்**
  - ஐந்தாம் தலைமுறை (5ஜி) அலைக்கற்றைத் தொழில்நுட்பத்தின் மூலமாக நாட்டின் பொருளாதார மதிப்பு 15 ஆண்டுகளில் சுமார் ரூ.35 லட்சம் கோடி வளர்ச்சி காணும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
  - நாட்டில் உயர் அதிவேக இணைய வசதியை வழங்கும் 6ஜி அலைக்கற்றைதொழில் நுட்பம் 2030-ஆம் ஆண்டுக்குள் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார்.
- **இந்தோ-பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பு (IBEF)**
  - அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜப்பான் பிரதமர் ஃபூமியோ கிஷிடா ஆகியோர் பங்கேற்றனர். மேலும் ஆஸ்திரேலியா, புருனே, இந்தோனேஷியா, கொரிய குடியரசு, மலேசியா, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளின் தலைவர்கள் காணொலி காட்சி மூலம் பங்கேற்றனர்.
- **ஸ்டார்ட் அப் துறையில் 100 "யுனிகார்ன்" நிறுவனங்கள்**
  - இந்தியாவில் யூனிகார்ன்களின் எண்ணிக்கை 100-ஐ எட்டியுள்ளதைக் "மனதின் குரல்" நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, குறிப்பிட்டார். கோவிட் தொற்றுநோய்களின் போது கூட, இந்தியாவின் ஸ்டார்ட்அப்கள் தொடர்ந்து செல்வத்தையும் மதிப்பையும் உருவாக்கி வருவதாகக் கூறினார்.
  - ஒரு யுனிகார்ன் அந்தஸ்தை பெறுவதற்கு ஒரு புத்தாக்க நிறுவனத்தின் விற்றுமுதல் (7,500 crore turnover) குறைந்தபட்சம் ரூ.7,500 கோடியாக இருக்க வேண்டும். நாட்டில் உள்ள "யுனிகார்ன்" நிறுவனங்களின் மொத்த மதிப்பு ரூ.25 லட்சம் கோடியைக் (330 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) கடந்துள்ளது.
- **இந்தியாவில் புதிய மேம்பாட்டு வங்கி**
  - பிரிக்ஸ் நாடுகளின் புதிய மேம்பாட்டு வங்கியானது, குஜராத் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நகரில் (Gujarat International Finance Tec-City-GIFT City) இந்தியாவின் பிராந்தியப் புதிய மேம்பாட்டு வங்கி அலுவலகத்தைத் திறக்க திட்டமிட்டுள்ளது.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## உலக நிகழ்வுகள்

❖ **தென் கொரியா: புதிய அதிபர் சுக்-யியோல்**

- தென் கொரியாவின் புதிய அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட யூன் சுக்-யியோலுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

❖ **இந்தோ – பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பு**

- இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, புரூனே, மலேசியா, இந்தோனேசியா, தென்கொரியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியாட்நாம் ஆகிய 13 நாடுகள் (IPEF) கூட்டமைப்பை எற்படுத்தியுள்ளன.
- இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகியவை நாற்கர Quad நாடுகள்.
- நீடித்த வளர்ச்சி ஒருங்கிணைப்பு, பொருளாதார வளர்ச்சி, நாடுகளின் பொருளாதாரப் போட்டி என்ற ஆக்கபூர்வமாக மேம்படுத்தும் நோக்கில் துவங்கப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழல்

❖ **புயலுக்கு தமிழ்ப் பெயர்**

- வங்கக்கடலில் உருவாகிய புயலுக்கு 'அசானி' (சிங்கள மொழியில் பெருஞ்சினம்) என்று இலங்கை பெயர் சூட்டியுள்ளது. அசானி புயலைத் தொடர்ந்து அடுத்து உருவாகும் புதிய புயலுக்கு சித்ரங் என பெயரிடப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்தியா அளித்துள்ள குர்மி, பிரவாஹோ, ஜார், முரசு போன்ற பெயர்களும் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படவுள்ளன.
- புயல்களுக்குப் பெயர் சூட்டும் வழக்கத்தைத் தொடங்கியவர் பிரிட்டனைச் சேர்ந்த வானியல் விஞ்ஞானி கிளெமென்ட் ராக் (1852-1922) என்பவராவார்.

❖ **நீல நிற வயிருடைய குக்ரி வகை பாம்பு (Blue Belly Kukri Snake)**

- நீல நிற வயிருடைய குக்ரி (பனையன்) வகை பாம்பானது (ஒலிகோடன் மெலனியஸ் வால்) மனாஸ் தேசியப் பூங்காவில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.

❖ **இமயமலையில் உலகின் மிக உயரமான வானிலை நிலையம்**

- தேசியப் புவியியல் சங்கம் (National Geographic Society) வல்லுநர்களால் உலகின் மிக உயரமான வானிலை நிலையம் ("world's highest weather station") இமயமலையின் 8,830 உயரத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

❖ **உலகம் உருவான கருந்துளையின் முதல் புகைப்படம் வெளியீடு**

- பால்வெளி மண்டலத்தில் காணப்படும் மாபெரும் கருந்துளையின் (பிளாக் ஹோல்) முதல் புகைப்படத்தை வானியலாளர்கள் வெளியிட்டுள்ளனர்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- விர்கோ கேலக்ஸி கிளஸ்டர் அருகில் மெசியர் 87-ன் மத்தியில் மாபெரும் கருந்துளை கண்டறியப்பட்டதாக ஐரோப்பிய தெற்கு ஆய்வகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- ஆராய்ச்சியாளர்களால் மான்ஸ்டர் என அழைக்கப்படும் இந்த கருந்துளை பூமியில் இருந்து சுமார் 5.5 கோடி ஒளியாண்டுகள் தொலைவில் இருக்கிறது.
- சூரியனைவிட 40 லட்சம் மடங்கு பெரிதாக இந்தக்கருந்துளை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ **Su-30 MKI 'பிரமோஸ்' ஏவுகணை சோதனை வெற்றி**

- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட எஸ்யூ-30 எம்கேஜ போர் விமானத்திலிருந்து வான் இலக்கை தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் (ஒலியைவிட அதிக வேகமானது) ஏவுகணை வெற்றிகரமாக வங்காளவிரிகுடாவில் பரிசோதிக்கப்பட்டது.
- நீட்டிக்கப்பட்ட தூரத்திற்கான பிரம்மோஸ் ஏவுகணை எஸ்யூ-30 எம்கேஜ போர் விமானத்திலிருந்து செலுத்தப்பட்டது. இதுவே முதல் முறையாகும். இதன் மூலம் தரை / கடல் பகுதியில் தொலைதூர இலக்குகளை தாக்கும் திறனை இந்திய விமானப்படை பெற்றுள்ளது

❖ **கப்பலை தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனை வெற்றி**

- முழுக்க முழுக்க உள்நாட்டில் ஒடிசா மாநிலம் பலாசோர் பகுதியில் ஹெலிகாப்டரில் இருந்து போர்க் கப்பல்களைத் தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும் (டிஆர்டிஓ), இந்திய கடற்படையும் வெற்றிகரமாக மேற்கொண்டன.
- கப்பல்களை தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட ஏவுகணை முழுக்க முழுக்க இந்தியாவில் தயாரிக்கப்பட்டிருப்பது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **CCMB இந்தியா mRNA தடுப்பூசி தளம் (CCMB : develops India mRNA Vaccine platform)**

- செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியலுக்கான மையம் (CCMB) முதல் உள்நாட்டு எம்ஆர்என்ஏ தடுப்பூசி தொழில்நுட்பத்தின் "கோட்பாட்டின் ஆதாரத்தை" ("Proof of Principle") நிறுவியுள்ளது.

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

❖ **சிஐஏ- முதல் தலைமைத் தொழில்நுட்ப அதிகாரி நந்த் முல்சந்தானி**

- அமெரிக்காவின் உளவுத்துறையான, மத்திய புலனாய்வு முகமை (CIA) உலகின் முதன்மையான உளவுத்துறைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த அமைப்பு தற்போது முதன் முதலாக தலைமை தொழில்நுட்ப அதிகாரி (CTO) என்ற தலைமை பொறுப்பை உருவாக்கி, அதற்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நந்த் முல்சந்தானி என்பவரை நியமித்துள்ளது.
- சிஐஏ இயக்குநர் வில்லியம் ஜே.பர்ன்ஸ்.

- **BSE-தலைவர் எஸ்.எஸ். முந்த்ரா**
  - மும்பை பங்குச் சந்தையின் (பிஎஸ்இ) தலைவராக எஸ்.எஸ். முந்த்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- **நீதி ஆயோக் துணைத் தலைவராக சுமன் பெரி பொறுப்பேற்பு**
  - நிதி ஆயோக்கின் மூன்றாவது துணைத் தலைவராக சுமன் பெரி பொறுப்பேற்றார்.
  - 2014-ம் ஆண்டு அறிவுசார் நிபுணர்கள் குழுவாக நிதி ஆயோக் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. முதல் முறையாக அதன் துணைத் தலைவர் பதவியில் இருந்து 2017ல் அரவிந்த் பனகாரியா விலகியதை தொடர்ந்து ராஜீவ் குமார் பொறுப்பேற்றார்.
  - தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சி கவுன்சிலின் (NCAER) தலைமை இயக்குனராகவும், ராயல் டச்சு ஷெல் அமைப்பின் உலகளாவிய தலைமை பொருளாதார நிபுணராகவும் திரு பெரி பணியாற்றியுள்ளார்.
- **16-வது முறை எவரெஸ்ட் சிகரம் ஏறி பிரிட்டிஷ் வீரர் சாதனை**
  - பிரிட்டனை சேர்ந்த 48 வயதான கென்டன் கூல், உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தை 16-வது முறையாக ஏறி சாதனை படைத்துள்ளார். இதன்மூலம், நேபாள நாட்டை சேராத ஒருவர், அதிக முறை எவரெஸ்ட் சிகரத்தை ஏறிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.
  - உலகிலேயே மிக உயரமான சிகரம் எவரெஸ்ட். சீனா, நேபாள எல்லையில் உள்ள இதன் உயரம் 8,848 மீட்டர் (29,035 அடி) ஆகும்.
- **பாங்க் ஆஃப் இங்கிலாந்து நிதிக் குழுவில் இந்தியப் பெண்**
  - பிரிட்டனின் மத்திய வங்கியான பாங்க் ஆஃப் இங்கிலாந்தின் நிதிக்குழுவில் இந்தியப் பெண்ணும், பொருளாதார பேராசிரியருமான ஸ்வாதி திங்ரா இடம் பெற்றுள்ளார்.
- **இந்திய ராணுவத்தில் முதல் பெண் போர் விமானி அபிலாஷா**
  - இந்திய ராணுவ விமானப் படையின் முதல் பெண் போர் விமானியாக கேப்டன் அபிலாஷா பராக் பயிற்சியை வெற்றி கரமாக முடித்து பொறுப்பேற்றார்.
  - பிரிட்டன் ராணுவத்தின் ராயல் விமானப் படை, இந்தியாவில் ராணுவ விமானப் பிரிவை 1942ல் துவங்கியது.
  - இதன் முதல் விமானம் 1947ல் இயங்க துவங்கியது. நம் ராணுவத்துக்கான பிரத்யேக விமானப் படை 1986ல் துவக்கப்பட்டது.
- **டைம் இதழின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களின் பட்டியல்**
  - 2022 ஆம் ஆண்டின் உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களில் டைம் இதழின் பட்டியலில் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கருணா நுண்டி, தொழில் அதிபர் கௌதம் அதானி மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் குர்ரம் பர்வேஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
  - இப்பட்டியல் சின்னங்கள், முன்னோடிகள், டைட்டன்ஸ், கலைஞர்கள், தலைவர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் என ஆறு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **நியூயார்க் பெடரல் ரிசர்வ் வங்கி இயக்குநர் குழுவிற்கு அரவிந்த் கிருஷ்ணா தேர்வு**
  - ஐபிஎம் தலைவரும், தலைமை செயல் அதிகாரியுமான அரவிந்த் கிருஷ்ணா, நியூயார்க் பெடரல் ரிசர்வ் வங்கியின் இயக்குநர்கள் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- **29-வது இராணுவ தலைமை தளபதி - மனோஜ் பாண்டே பொறுப்பு**
  - இவர் கடற்படை, விமானப்படை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பொறுப்பு இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - முப்படைகளின் தலைமை தளபதி – விபின் ராவத் இறப்பு காரணமாக இப்பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
  - 28-வது இராணுவ தலைமை தளபதி M.M. நரவணே.

## திட்டம்

- **'ஆஷா' (அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார பணியாளர்கள்)**
  - இந்தியாவிலுள்ள 10 லட்சம் அனைத்து மகளிர் ஆஷா தன்னார்வலர்களை கௌரவிக்கும் விதமாக உலக சுகாதார அமைப்பு தலைவரின் "சர்வதேச சுகாதார தலைவர்கள்" என்ற விருதை WHO அளித்தது.
  - ஒவ்வொரு கிராமத்திலும் (1/1000 மக்கள் தொகை) நன்கு பயிற்சி பெற்ற பெண் சுகாதார ஆர்வலர்களை (அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார ஆர்வலர்- ASHA) வழங்குவதே இந்த பணியின் முக்கிய உத்தியாகும்.
    1. மக்களிடையே ஊட்டச்சத்து குறைபாட்டுப் பிரச்சனையைப் போக்குதல்.
    2. சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்
    3. ஆரோக்கியமான வாழ்வுமுறைகளை ஊக்குவித்தல்

## மாநாடுகள்

- **உலக சுகாதார அமைப்பு 75வது உலக சுகாதார மாநாடு**
  - மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் 75-வது உலக சுகாதார மாநாட்டில் பங்கேற்றார்.
  - இந்த ஆண்டின் கருப்பொருள்: அமைதிக்கு ஆரோக்கியம், ஆரோக்கியத்திற்கு அமைதி.
- **குவாட் மாநாடு - 2022**
  - குவாட் அமைப்பின் உறுப்பு நாடுகளான அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள், பிராந்தியப் பாதுகாப்பு குறித்து ஜப்பானில் (டோக்கியோ) பேச்சுவார்த்தை நடத்தின.
- **உலக பொருளாதார கூட்டமைப்பு மாநாடு - 2022 (WEF)**
  - சுவிட்சர்லாந்து நாட்டில் டாவோஸ் நகரில் (DAVOS) உலக பொருளாதார கூட்டமைப்பு மாநாடு நடைபெற்றது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# பாதுகாப்பு

- **HANSA-NG (ஹன்சா-என்ஜி) பயிற்சி விமானம்**
  - முதன்முதலாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் பயிற்சி விமானமான ஹன்சா-என்ஜியை, அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ், பெங்களூருவில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை அமைப்பின் - தேசிய ஏரோஸ்பேஸ் ஆய்வகம் (CSIR-NAL) இந்த பயிற்சி விமானத்தை வடிவமைத்து, உருவாக்கியுள்ளது.
- **வார்டெக் திட்டம் (Project WARDEC)**
  - இராணுவப் பயிற்சிப் படைப்பிரிவு மற்றும் காந்திநகரைச் சேர்ந்த தேசியப் பாதுகாப்பு பல்கலைக் கழகம் ஆகியவை, புதுதில்லியில் போர்க்கள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தை நிறுவுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- **புதிய ராணுவ தலைமைத் தளபதியாக மனோஜ் பாண்டே**
  - இந்திய ராணுவத்தின் 29 ஆவது ராணுவ தலைமை தளபதியாக மனோஜ் பாண்டே பொறுப்பேற்றார்.
  - 28-ஆவது ராணுவ தலைமை தளபதி எம்.எம்.நரவனே.
- **'ஐஎன்எஸ் சூரத்', 'ஐஎன்எஸ் உதய்கிரி போர்க்கப்பல்கள் அறிமுகம்**
  - உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ள 'ஐஎன்எஸ் சூரத்', 'ஐஎன்எஸ் உதய்கிரி' ஆகிய இரு போர்க் கப்பல்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் 2 போர்க்கப்பல்கள் அறிமுகம் செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும்.
  - INS – சூரத் – இந்தியாவின் 2வது மிகப்பெரிய வர்த்தக நகரம் பெயர்
  - INS – உதயகிரி – ஆந்திரா மலைத்தொடர் பெயர்
  - சூரத் போர்க் கப்பல், 15பி டெஸ்ட் ராயர்ஸ் திட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் நான்காவது கப்பலாகும். இந்தக்கப்பலுக்கு மேற்கு இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தக நகரமான சூரத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
  - 17ஏ ஃபிரிகேட்ஸ் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள 3-ஆவது கப்பல் “உதய்கிரி”. இந்தக் கப்பலுக்கு ஆந்திர மலைத்தொடரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பி17 ஃபிரிகேட்ஸ் (ஷிவாலிக்) வகை போர்க் கப்பலின் மேம்பட்ட வடிவமாக கூடுதல் சிறப்பம்சங்களுடன் இந்தக் கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது.
  - கடந்த 1976-ஆம் ஆண்டு முதல் 2007-ஆம் ஆண்டு வரை 30 ஆண்டுகள் ராணுவத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட “உதய்கிரி” போர்க் கப்பலின் மறுபடைப்பாக புதிய போர்க் கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது.
- **ஐரோப்பிய படைக் கருவிகளுக்கான மின்கலங்கள் வழங்கும் இந்திய நிறுவனம்**
  - ஐரோப்பிய ராணுவப் படைகள் பயன்படுத்தும் தளவாடங்களுக்கான மின்கலங்களை (பேட்டரி) பெங்களூரைச் சேர்ந்த 'பிரவாய்க்' நிறுவனம் வழங்கவுள்ளது.

- ஐரோப்பிய நாடுகளின் ராணுவங்களுக்கான தளவாடங்களை எம்2எம் ஃபேக்டரி, ஏஎம்ஜி புரோ ஆகிய நிறுவனங்கள் விநியோகித்து வருகின்றன. பல்வேறு தளவாடங்களை படைகளுக்கு அந்நிறுவனங்கள் தயாரித்து வழங்கி வருகின்றன.
- அந்நிறுவனங்கள் தயாரிக்கும் ராணுவத் தளவாடங்களில் இடம் பெறும் மின்கலத்தை பெங்களூரைச் சேர்ந்த பிரவேய்க்ஸ்டார்ட்-அப் நிறுவனம் வழங்கவுள்ளது.

## விருதுகள்

❖ **புலிட்ஸர் விருது**

- இந்தியர்களான அட்னான் அபிடி, சன்னா இர்ஷாத் மட்டூ, அமித் டேவ் மற்றும் மறைந்த டேனிஷ் சித்திக் ஆகியோருக்கு பத்திரிகைத் துறையில் ஆவண புகைப்படத்துக்கான பிரிவில் புலிட்சர் பரிசு அறிவிக்கப்பட்டது. .
- 1917ஆம் ஆண்டு முதல் பத்திரிகை, இணைய ஊடகம், இலக்கியம், இசையமைப்பு, நாடகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குகிறவர்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் புலிட்சர் பரிசு வழங்கப்படுகிறது. கொலம்பியா பல்கலைக்கழகம் மூலம், அமெரிக்க பத்திரிகையாளர் ஜோசப் புலிட்சர் பெயரில் இவ்விருது வழங்கப்படுகிறது.
- மறைந்த டேனிஷ் சித்திக் ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியது குறித்து செய்தி சேகரிக்கச் சென்றபோது அங்கு நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **வங்காரி மாத்தாய் வன சாம்பியன் விருது - 2022**

- கேமரூன் ஆர்வலர், செசிலி என்ட்ஜெபெட் (Cecile Ndjebet) 2022 ஆம் ஆண்டின் வங்காரி மாத்தாய் வன சாம்பியன் விருதை வென்றுள்ளார்.
- காடுகளைப் பாதுகாப்பதிலும், அவற்றைச் சார்ந்துள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் இவர் ஆற்றிய சிறந்தப் பங்களிப்பிற்கான அங்கீகாரமாக இவ்விருது வழங்கப்படுகிறது.
- காடுகள் மீதான கூட்டாண்மை அமைப்பினால் (CPF) இந்த விருது வழங்கப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) தலைமையின் கீழ் உள்ளது.

❖ **இந்தியாவின் பெண் எழுத்தாளருக்கு சர்வதேச புக்கர் விருது**

- 'டெல்லியைச் சேர்ந்த இந்தி மொழி பெண் எழுத்தாளர் கீதாஞ்சலிக்கு 'டூம்ப் ஆஃப் சாண்ட்' நாவலுக்காக சர்வதேச புக்கர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச புக்கர் விருது வென்ற முதல் இந்திய பெண் எழுத்தாளர் என்ற பெருமையை கீதாஞ்சலி பெற்றுள்ளார்.
- தேசி ராக்வெல் என்பவரால் டோம்ப் ஆஃப் சாண்ட் என ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட இவரது நாவலான ரெட் சமாதி புத்தகமானது, புக்கர் பரிசை வென்றுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தி மொழி புத்தகம் ஆகும். இந்த புத்தகம் நாட்டின் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

❖ **சங்கீத கலாநிதி விருது**

- 2020 – நெய்வேலி ஆர்.சந்தான கோபாலன் – நர்நாடக இசைக்கலைஞர்
- 2021 – திருவாரூர் பக்தவச்சலம் – மிருதங்க இசைக் கலைஞர்
- 2022 – லால்குடி ஜி.ஜெ.ஆர். கிருஷ்ணன் (வயலின்) மற்றும் ஜி.ஜெ.ஆர்.விஜயலட்சுமி (வயலின்).

## விளையாட்டு நிகழ்வுகள்

❖ **ஜூனியர் பளுதூக்குதல் இந்தியா சாம்பியன்**

- கிரீஸில் நடைபெற்ற உலக ஜுனியர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஹர்ஷதா கருட் (Harshada Garud) தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். உலக ஜூனியர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா தங்கப் பதக்கம் வெல்வது இதுவே முதன்முறையாகும்.

❖ **டெஃப்லிம்பிக்ஸ் (Deaflympics) போட்டி : இந்தியாவுக்கு தங்கம்**

- பிரேசிலின் காக்சாய்ஸ் டோ சுல் (Caxias do Sul) நகரில் நடைபெற்ற 24-வது காது கேளாதோர் ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணி, 8 தங்கம் உள்ளிட்ட 16 பதக்கங்களை வென்று 9-வது இடத்தை பிடித்தது..

❖ **பாரா டேபிள் டென்னிஸ்**

- ஜோர்டான் அல் வடானி நகரில், நடைபெற்ற சர்வதேச பாரா டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவுக்கு 4 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலம் என 12 பதக்கங்கள் கிடைத்தன.

❖ **தாமஸ் கோப்பை பேட்மிண்டன்; வரலாறு படைத்தது இந்திய அணி**

- தாமஸ் கோப்பைக்கான பேட்மிண்டன் போட்டி தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நடைபெற்றது. இதில், இந்திய பேட்மின்டன் அணி. 73 வருடங்களில் முதன்முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **துப்பாக்கி சுடுதல் - இந்தியா முதலிடம்**

- சர்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளனம் (ISSF) நடத்திய ஜுனியர் உலகக் கோப்பை போட்டியில் இந்தியா 33 பதக்கங்கள் வென்று முதலிடம் பிடித்தது.
- பிரெஞ்சு லீக் கால்பந்து போட்டியின் – 2022-ஆம் ஆண்டின் சிறந்த வீரர் – கிலியான் எம்பாபே.

❖ **சர்வதேச பாரா டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி**

- ஜோர்டனில் நடைபெற்ற போட்டியில் இந்தியா 4 தங்கம் உட்பட 12 பதக்கங்கள் வென்றது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## புள்ளிவிவரம்

- **உலக பத்திரிகை சுதந்திர தரவரிசை 2022: 150-வது இடத்தில் இந்தியா**
  - "எல்லைகளைக் கடந்த பத்திரிக்கையாளர்கள்" (Reporters without Borders) எனும் சர்வதேச ஊடகவியலாளர்களின் அமைப்பு ஆண்டுதோறும் பல்வேறு நாடுகளில் ஊடக சுதந்திரம் குறித்து அறிக்கை வெளியிடுகிறது.
  - இந்தியா – 150-வது இடம் (மொத்தம் – 180 நாடுகள்).
  - நார்வே, டென்மார்க், ஸ்வீடன், எஸ்டோனியா, ஃபின்லாந்து ஆகிய நாடுகள் முறையே முதல் 5 இடங்களில் உள்ளது.
  - தரவரிசைப் பட்டியலில் 180-வது இடத்தில வடகொரியா உள்ளது.
  - 2021-ம் ஆண்டு தரவரிசைப் பட்டியலில் இந்தியா 147 ஆவது இடம்.
- **பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2021**
  - 2021ஆம் ஆண்டு பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீட்டில் இந்தியா 54-வது இடத்தில் உள்ளது..
  - இதில் ஜப்பான் முதல் இடத்தில் உள்ளது. அமெரிக்கா, ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
  - 2019-ல் இக்குறியீட்டில் இந்தியா 46-வது இடத்தில் இருந்தது.
  - இது உலகப் பொருளாதார மன்றத்தால் வெளியிடப்பட்டது.

## புத்தகம்

- **காவல் துறை சீர்திருத்தம் குறித்த புத்தகம்** - முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி பிரகாஷ் சிங் எழுதியது.
- **'மோடி@20ட்ரீம்ஸ் மீட்டிங் டெலிவரி**' (கனவுகள் நனவாகுதல்) புத்தகத்தை குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு வெளியிட்டார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## முக்கிய தினம்

1. மே 1 - தொழிலாளர் தினம்
2. மே 3 - உலக பத்திரிகைச் சுதந்திர தினம்
3. மே 4 - நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் தினம்
4. மே 4 - சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம்
5. மே 5 - சர்வதேசப் பேறுகால உதவியாளர் தினம்
6. மே 7 - சர்வதேச வானியல் தினம்
7. மே 8 - உலக தலாசீமியா தினம்
8. மே 8 - உலகச் செஞ்சிலுவை தினம்
9. மே 12 - சர்வதேச செவிலியர் தினம்
10. மே 14 - உலக புலம்பெயர் பறவை தினம்
11. மே 16 - தேசிய டெங்கு தினம்
12. மே 16 - புத்த பூர்ணிமா தினம்
13. மே 18 - உலக எய்ட்ஸ் தடுப்பூசி விழிப்புணர்வு தினம்
14. மே 18 - உலக அருங்காட்சியக தினம்
15. மே 20 - உலக தேனீ தினம்
16. மே 21 - பயங்கரவாத எதிர்ப்புத்தினம்
17. மே 22 - சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம்
18. மே 24 - காமன்வெல்த் தினம்
19. மே 25 - உலக தைராய்டு விழிப்புணர்வு தினம்
20. மே 28 - பெண்களுக்கான மாதவிடாய் விழிப்புணர்வு தினம்
21. மே 29 - ஐக்கிய நாடுகளின் அமைதி காப்பு வீரர்களுக்கான சர்வதேச தினம்
22. மே 31 உலகப் புகையிலை எதிர்ப்புத் தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com